2023 அக்டோபர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த பெண்கள், கைம்பெண்கள், அதைப்போல, தாய், தகப்பன் இல்லாத ஆதரவற்ற பெண்களெல்லாம் தங்குவதற்கு தாம்பரத்தில் சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. அங்கே தங்கக்கூடிய பிள்ளைகளுக்கு நாம் கல்வி அளிக்கிறோம்; தொழிற்பயிற்சி அளிக்கிறோம். ஆகவே, அவர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு, அவர்கள் எதிர்காலத்தில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ளக்கூடிய அளவிற்கு, அவர்களுக்கு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்துகிற தேர்வுகளுக்கான பயிற்சியும் இந்தத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களெல்லாம் அங்கு தங்கிப் பயனடையலாம். ஏனென்றால், அங்கு அதிகமான பேர் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது. உதாரணத்திற்கு 100 பேர் தங்கலாம் என்றால் இப்போது அங்கே 25 பேர், 33 பேர்தான் இருக்கின்றனர். ஆகவே, அந்த இல்லத்தை மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

214—

கோரைப் பாய் நெசவுப் பூங்கா

***58818—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் கோரைப் பாய் நெசவுப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் வந்தவாசி மத்திய பாய் நெசவாளர்கள் மற்றும் கோரை உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் 16–12–1962 முதல் செயல்பட்டு

வருகிறது. அது தற்போது 1,000 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இச்சங்கத்தில் உற்பத்தியாகும் கோரைப் பாய்கள் காதி கிராப்ட், அரசு மருத்துவமனைகள், சர்வோதய சங்கங்கள், சிறைத் துறைகள், அரசுப் பள்ளிகள், கல்லூரி விடுதிகள், அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் வாரியத்தால் நடத்தப்படும் கண்காட்சிகள் ஆகியவற்றின்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வந்தவாசி மற்றும் அதன் சுற்றுப்புற கிராம மக்கள் விசைத்தறிமூலம் பாய்களை நெசவு செய்து வருகிறார்கள். இச்சங்கத்தின் பாய் வகைகள் கதர் வாரியத்தின் வழிகாட்டுதலின்படி, உரிய வகையில் சந்தைபடுத்தப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், புதியதாகக் கோரைப் பாய் நெசவுப் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.

திரு. S. அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையத்திற்கு நாய் famous என்றால், வந்தவாசிக்கு பாய் famous. வந்தவாசியில் பாய் நெசவாளர்கள் பெரும்பாலோர், சிறு தொழிலாக பலநூறு ஆண்டுகாலமாகச் செய்து வருகின்ற காரணத்தினால், பாய் நெசவாளர் தொழிலை மேம்படுத்தும்வகையில், பாய் நெசவாளர்களுக்கு ஒரு பாய் நெசவுப் பூங்கா அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதியில் உள்ளவர்கள் குறைந்தபட்சம் 25 நபர்கள் ஒன்று சேர்ந்து, புதிதாகக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க விருப்பம் தெரிவிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலம் தொழிற்சங்கம் பதிவு செய்து, அதன்மூலம், பாய் நெய்வோர்களுக்குத் தேவையான பயிற்சியுடன்கூடிய அனைத்து உதவிகளும் செய்யப்படும். நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான், கதர்த் துறையின் வருமானம் ரூபாய் 52 கோடியிலிருந்து ரூபாய் 99 கோடியாக உயர்ந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சிறப்பான ஆட்சியிலேதான் இத்துறை மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது

2023 அக்டோபர் 10]

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கூட்டுறவுச் சங்கம் அமைக்க இடம் தருகின்றபட்சத்தில், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல இலட்சம் பேர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வந்தவாசியில் முதன்முதலாக கோரைப் பாய் நெசவுப் பூங்கா அமைக்கப்படுமா? சிறுபான்மை மக்கள் குறிப்பாக, இஸ்லாமிய சகோதர–சகோதரிகள் பெரும்பாலானோர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபடுவதால், சிறுபான்மையினர் நலத் துறையின் மூலமாகவோ அல்லது அரசு சிறப்புக் கவனம் செலுத்தியோ வந்தவாசியில் முதன்முதலாக பாய் நெசவுப் பூங்காவை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை கிராமத்தில் சிறுபான்மையின மக்களான இஸ்லாமிய மக்களுக்கும் பாய் உற்பத்தி செய்யும் மிகப் பெரிய சங்கம் இருக்கின்றது. அதேபோல், வந்தவாசியிலும் சிறுபான்மையின மக்கள் நிறைய பேர் வசிக்கிறார்கள். அவர்கள் விரும்புகின்ற பட்சத்தில், அவர்கள் இடம் வழங்குகின்ற பட்சத்தில், தொழிலாளர்களுக்கு உதவிடும் வகையில், அங்கு தொழிற்கூடம் அமைத்திட அரசு பரிசீலிக்கும்; நிச்சயமாக சிறுபான்மையின மக்களின் கோரிக்கைகளை நம்முடைய அரசு நிறைவேற்றும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்கள் பல்வேறு ஊர்களில் பாய் நெசவுத் தொழிலை செய்து வருகிறார்கள். என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியிலுள்ள ஆவூர் என்ற கிராமத்திலே பாய் நெசவாளர்கள் இருக்கிறார்கள். சீர்காழியில் இருக்கின்ற பாய் நெசவாளர்களுக்கெல்லாம் இலவச*

மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், எங்களுடைய ஆவூர் பகுதி மற்றும் வந்தவாசி பகுதியிலே இருக்கின்ற பாய் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை. தமிழ்நாட்டில் எங்கேயுமே பாய் நெசவுப் பூங்கா இல்லாமல் இருக்கிறது. ஆகவே, சிறுபான்மையின மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்குகின்ற வகையில் எங்களுடைய மாவட்டத்தில், ஆவூர் அல்லது வந்தவாசியில் கண்டிப்பாக ஒரு பாய் நெசவுப் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, மின்சாரம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், பாய் நெசவுத் தொழிலினுடைய பொருட்கள் எல்லாம் நம்முடைய அரசு நிறுவனங்களுக்கெல்லாம் முறையாக supply செய்யப்படுகின்றன. கதர் வாரியத்தின்மூலம், போக்குவரத்துக் கழகங்கள், சிறைத் துறை மற்றும் எல்லாத் துறைகளுக்கும் கொடுக்கப்படுகின்றன. அதில் எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை. வந்தவாசியில் சிறுபான்மையின மக்கள் நிறைய பேர் வசிக்கிறார்கள். சிறுபான்மையின மக்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அரசு அதைப் பரிசீலிக்கும். அதற்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அவரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொழிற்கூடம் ஒன்றைக் கட்டித் தந்து, பாய் உற்பத்தி செய்கின்ற சங்கம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.